திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய கண்ணப்பாளையம் ஊராட்சி மேல்பாக்கம் கிராமத்தில் மாவட்ட அயலக அணி சார்பில் ஆயிரம் நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய கழகச் செயலாளர் கமலேஷ் தலைமையில் மாவட்டஅயலக அணி துணை அமைப்பாளர் மு.ராஜாராம் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு ஒரே இலக்கு தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதி மொழியை ஏற்று ஏழை எளியவர்களுக்கு புடவை பிரியாணி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, காயத்திரிஸ்ரீதர், எம்.முத்துதமிழசெல்வம், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஏ.ஜனார்த்தன், எம்.இளையான், கே.எஸ்.புகழேந்தி, ஆர்.எஸ்.பாஸ்கர், சுமதிகுமார், வி.பி.பிரகாஷ், வயலைபிரபாகரன், க. பரிமளழகன், திருமலை ராஜ், பேட்டை கேசவன், மே.ம.முத்து, டில்லி பாபு , தினேஷ்குமார், சதீஷ்குமார் , ஞானமூர்த்தி, லிங்கேஷ், எம்.கே.பாபு, மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் – சித்தாமூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் 500 பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சித்தாமூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் 72ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி சூனாம்பேடு பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் சிற்றரசு தலைமை தாங்கினார். ஒன்றிய துணை செயலாளர் முரளி அனைவரும் வரவேற்றார். ஒன்றிய அவை தலைவர் வரதராஜன், துணைச் செயலாளர் நிர்மல் குமார், ஜெயந்தி, ரமணய்யா, ஐயப்பன், குமரேசன், விஜயன், பிரேமா சங்கர், சாந்தி ரவிக்குமார், ஜீவா பூலோகம், பாரதி காண்டீபன், வசந்த ராஜ், சூனாம்பேடு ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இதனைத் தொடர்ந்து 500 மகளிர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் எம்பி செல்வம், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக், தலைமைக் கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, அவைத்தலைவர் இனிய அரசு, ஒன்றிய குழு பெருந்தலைவர் ஏழுமலை உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஒன்றியச் செயலாளர் சிற்றரசு தலைமையில் – சித்தாமூர் கிழக்கு ஒன்றியம் சார்பில்

முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்! 500 பேருக்கு நல உதவிகள்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார்! – க.செல்வம் எம்.பி. பங்கேற்பு!

காஞ்சிபுரம், மார்ச் 3 - சித்தாமூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் 500 பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சித்தாமூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் 72 ஆவது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி சூனாம்பேடு பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் சிற்றரசு தலைமை தாங்கினார். ஒன்றிய துணை செயலாளர் முரளி அனைவரும் வரவேற்றார்.

ஒன்றிய அவை தலைவர் வரதராஜன், துணைச் செயலாளர் நிர்மல் குமார், ஜெயந்தி, ரமணய்யா, ஐயப்பன், குமரேசன், விஜயன், பிரேமா சங்கர், சாந்தி ரவிக்குமார், ஜீவா பூலோகம், பாரதி காண்டீபன், வசந்த ராஜ், சூனாம்பேடு ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் எம்பி செல்வம், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக், தலைமைக் கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, அவைத்தலைவர் இனிய அரசு, ஒன்றிய குழு பெருந்தலைவர் ஏழுமலை உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதல்வர் பிறந்தநாள் விழா

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் கொண்டாடப்பட்டது!

மாவட்ட கழகப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் தலைமையில்

திருவள்ளூர், மார்ச் 03 தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72ஆவது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் பகுதிகளில் நலத்திட்ட உதவிகள் கழக கொடி ஏற்றுதல் கல்வெட்டு திறப்பு விழா நடைபெற்றது இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் எம்எஸ்கே ரமேஷ் ராஜ் தலைமையில் ஒரே இலக்கு தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதிமொழியை ஏற்று கழகக் கொடி ஏற்றிய கல்வெட்டு திறந்து வைத்து நலத்திட்ட உதவி அன்னதானங்கள் வழங்கினார்கள்.

இதில் மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் அத்திப்பட்டு ஊராட்சியில் கிளை கழக சார்பில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எம்.டி.ஜி.கதிர்வேல் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுகந்தி வடிவேல் ஏற்பாட்டில் ஆயிரம் நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் 2000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

எல்லாபுரம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜெ. மூர்த்தி ஏற்பாட்டில் அண்ணா சிலை அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து ஊராட்சி முழுவதும் கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு அன்னதானம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.

கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய கழக செயலாளர் மு.மணி பாலன் ஏற்பாட்டில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் கழக கொடியேற்றி பள்ளி மாணவர்களுக்கு நோட் புத்தகம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கி வே ஆனந்தகுமார் ஏற்பாட்டில் ஒன்றியத்தில் உள்ள அண்ணா சிலைக்கு சிலைக்கு மாலை அணிவித்து கழகக் கொடியேற்றி கேக் வெட்டி பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.

கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றிய கழக திமுக சார்பில் ஒன்றிய செயலாளர் நா.பரிமளம் ஏற்பாட்டில் ஆயிரம் நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் அறுசுவை உணவு வழங்கப் பட்டது.

அதேபோல் மீஞ்சூர் பேரூர் கழக சார்பில் பேரூர் கழகச் செயலாளர் க.சு. தமிழ் உதயன் ஏற்பாட்டில் ஆயிரம் பேருக்கு உணவு வழங்கி கழகக் கொடியேற்றி கிலோ கேக் வெட்டி பிறந்தநாள் விழாவை பொதுக்குழு உறுப்பினர் கே.எம் சுப்பிரமணி பேரூராட்சி மன்ற தலைவர் ருக்மணி மோகன்ராஜ் ஆகியோர் முன்னிலையில் கொண்டாடினார்கள்.

மீஞ்சூர் வடக்கு ஒன்றிய சார்பில் ஒன்றிய பொறுப்பாளர் முரளிதரன் ஏற்பாட்டில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் கழக கொடி பொதுமக்களுக்கு நலத்த உதவிகளை வழங்கினார்கள்.

சோழவரம் வடக்கு ஒன்றியம் நா. செல்வசேகரன் ஏற்பாட்டில் சோழவரம் வடக்கு ஒன்றிய முழுவதும் உள்ள ஊராட்சிகளில் நலத்திட்ட உதவிகள் அன்னதானங்கள் வழங்கினார்கள்

மீஞ்சூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கா.சு ஜெகதீசன் ஏற்பாட்டில் மீஞ்சூர் தெற்கு ஒன்றியம் முழுவதும் உள்ள ஊராட்சிகளில் 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் அறுசுவை வணங்குவது வழங்கி எல்லாபுரம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆ.சத்திய வேலு ஏற்பாட்டில் ஒன்றிய கழகம் முழுவதும் உள்ள ஊராட்சிகளில் கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.

பொன்னேரி நகரக் கழக சார்பில் நகரச் செயலாளர் ஜி.ரவிக்குமார் ஏற்பாட்டில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து அறுசுவை உணவு வழங்கினார்கள்.

ஆரணி பேரூர் கழக சார்பில் பேரூர் கழகச் செயலாளர் பி.முத்து ஏற்பாட்டில் 12 வார்டுகளில் கழக கொடி ஏற்றி பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

கும்மிடிப்பூண்டி பேரூர் கழக சார்பில் பேரூர் செயலாளர் இரா.அறிவழகன் ஏற்பாட்டில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து கழகக் கொடியேற்றி ஆயிரம் நபர்களுக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

பூண்டி வடக்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய கழக செயலாளர் ஜான் பொன்னுசாமி ஏற்பாட்டில் ஒன்றிய கழகம் முழுவதும் உள்ள ஊராட்சிகளில் கழக கொடியேற்றி கல்வெட்டு திறந்து வைத்து பல்வேறு நலத்திட்ட உதவிகள் உணவு வழங்கினார்கள்.

ஊத்துக்கோட்டை பேரூர் கழக சார்பில் பேரூர் செயலாளர் அபிராமி குமரவேல் ஏற்பாட்டில் பஜார் பகுதியில் அண்ணா , அம்பேத்கர் திருவள்ளுவர் சிலைகளுக்கு மாலை அணிவித்து கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி நோட் புத்தகங்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன், மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், மாவட்ட நிர்வாகிகள் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி மு.கதிரவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி கே.சுப்பிரமணி பா.செ.குணசேகரன், பி.வெங்கடாஜலபதி, டாக்டர் பரிமளம், மாநில அணிகளின் நிர்வாகிகள் சி.எச்.சேகர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ. அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஏ.கே.சுரேஷ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.வி.லோகேஷ், வெற்றி (எ) ராஜேஷ், என்.கிருஷ்ணமூர்த்தி, தேசராணி தேசப்பன், ஜெயலலிதா சசிதரன், V.T.ரவிக்குமார், கா.சம்பத் பா.தனசேகர், எஸ்.கோபி, ஜி.சுமன், மு.தினகரன் மு.பால்கர், கே.ஆறுமுகம் கோல்டு மணி, கே.ராஜேஷ், க.ஸ்ரீதர் , சம்பத், வில்சன் ரோஸ் பொன்னையன் ,ஜி.ரமேஷ், முகமது அலவி , வெங்கடேசன் , டி.மணி, உள்பட மாவட்ட அணிகளின் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் துணைத்தலைவர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி முன்னால் இந்நாள் பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் கிளைக் கழக செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

பா.அண்ணாதுரை தலைமை! கழகத் தலைவர் பிறந்த நாள் விழா!

துறைமுகம் 57 (அ) வட்டத்தில் கழகக் கொடியேற்றி அறுசுவை உணவு!

பகுதிச் செயலாளர் எஸ்.முரளி – எம்.விஜயகுமார் வழங்கினர்!

சென்னை, மார்ச். 3 சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி, 57 (அ) வட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, செங்காம் பஜார் நாட்டு பிள்ளையார் கோயில் தெருவில் வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி கழகக் கொடியேற்றி, கழகத் தலைவர் ஆணைப்படி, கழகத்தினர் உறுதிமொழியை ஏற்றனர். பின்பு இனிப்புடன் கூடிய உணவை வழங்கினார்.

நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.விஜயகுமார், தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் எல்.சம்பத்குமார், பகுதி துணைச் செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.சேகர், வட்ட அவைத் தலைவர் கே.ஜி.துளசிராமன், துணைச் செயலாளர் டி.வேலு, பகுதிப் பிரதிநிதிகள் தேவகானம் ராஜா, கேபிள் சங்கர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜெ.ஹரிக்குமார் மற்றும் சு.அண்ணாதாசன், இளைஞர் அணி வட்ட அமைப்பாளர் எஸ்.ராஜு, துணை அமைப்பாளர்கள் எம்.உதயா, எஸ்.முருகன், தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளர் டி.சேகர், நெசவாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பா.நடராஜ், விவசாய தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.வேலாயுதம், வட்ட தகவல் ஒருங்கிணைப்பாளர் சண்முகம், பாக முகவர்கள் அபிநவ், ராம்குமார், நாகலட்சுமி, எம்.சாய்பவன், எம்.வருண் குமார், எல்.பவானி, அமுலு, இ.பாபுராவ், டி.சுரேஷ், பன்னீர்செல்வம் மற்றும் கருப்பையா, கொத்தவால்சாவடி கணேசன், பப்லு , அருண், சுதர்சனம், ஏ.லிங்கேஷ், ஏ.கிஷோர், தாரா, ரதி தேவி, நிர்மலா, கீதா, கார்த்திகா, கலை வாணி, ராஜேஸ்வரி, சுஜாதா, மலர், வைத்திஸ்வரி, கோவிந்தன், எம்.கார்த்திக், எம்.ஜெகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் தெற்கு பகுதி 107(அ) வட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அமைந்தகரை கண்ணையா செட்டி தெருவில் வட்டச் செயலாளர் வி.எம். சிவா ஏற்பாட்டில், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், அண்ணா நகர் தெற்கு பகுதி செயலாளர் இராமலிங்கம் எம்.சி., கலந்துகொண்டு கொடியேற்றி அறுசுவை உணவு வழங்கினர். நிகழ்வில் சேரன், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணி இளைஞரணி மற்றும் B L2, BLc உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி டியுசிஎஸ் திராவிட தொ.மு.ச.சார்பில் சென்னை திருவல்லிக்கேணி பெரியதெருவில் அமைந்துள்ள டியுசிஎஸ் தலைமைஅலுவலகத்தில்தொ.மு.ச.பொதுச்செயலாளர் .மு.சண்முகம் எம்.பி.. அனுமதியுடன் டியுசிஎஸ் திராவிடதொ.மு.ச.பொதுச்செயலாளர் இராஜன்சாமிநாதன் தலைமையில் முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. பேரவைத் தலைவர் கி.நடராஜன் தொழிலாளர்களுக்கு புடவை, பேண்ட், சட்டையும், அறுசுவை உணவுஆகியவற்றை வழங்கினார். மேலும் பொருளாளர் கோசி. வள்ளுவன் துணைத் தலைவர் இரா.பொன்னுராம், மொத்த விற்பனைபண்டகசாலைகள்மாநில பொதுச்செயலாளர் சு.பத்மநாபன் ஆகியோரும் இணைந்து வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் நிர்வாகிகள் தலைவர்.ஆ.எம்பிநாதன்,S. பக்தவச்சலம்,N.பிரபாகரன் மா.இராஜசேகர்.ஜா.ரவிச்சந்திரன் R.முத்து,மலர்மன்னன், கதிரவன்,கஜேந்திரன்.முத்துச்செல்வன், சக்திவேல்,சுரேசன்,சதீஷ்.தினகரன்,திருமதி.சரளா.குண்டலகேசி,தமிழ்ச்செல்வி,ஜெயந்தீ,லட்சுமி, இராஜேஸ்வரி,சாந்தகுமாரி,முத்துலட்சுமி,வரலட்சுமி,கமலா,கோமளா மற்றும் பலர் கலந்துகொண்டார்கள்.

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 72–வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 33–வது வட்ட திமுக மற்றும் மாதா மருத்துவமனை இணைந்து நடத்தும் மருத்துவ முகாம் நடைபெற்றது. தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா மருத்துவ முகாமை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழு தலைவர்,பகுதி செயலாளர் டி.காமராஜர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் செ.சுரேஷ் வட்ட செயலாளர் எம்.வினோத் மற்றும் கழக நிர்வாகிகள் மா.கன்னியப்பன், கோ.பார்த்திபன் மு.ஸ்டாலின் கோ.மணி சு.ரகுபதி, ப.இந்திரகுமார் தே.தயாளன் எம்.பார்த்திபன் கி.லெனின்.ஏ.ராஜேஷ் ம.கார்த்திக் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகரம் செம்பாக்கம் தெற்கு பகுதி திமுக சார்பில் கழகத் தலைவரின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு அமைச்சர் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் வழிகாட்டுதலின்படி எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிவித்தபடி க.ராமச்சந்திரன் தலைமையில், மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் காமராஜபுரம் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி கழகத் தோழர்களுக்கு மற்றும் பொது மக்களுக்கு அன்னதானமும் வழங்கியும் சிட்லபாக்கம் கட்சி அலுவலகத்தில்முக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சா.லட்சுமிபதி, ராஜா ,சி.கல்யாணி மணிவேல். எம் சி, தேவ முருகன், க.அன்பழகன், வ.விஜயரங்கன், டி. தட்சிணாமூர்த்தி, கீ.ராஜேந்திரன், கு.தமிழ்செல்வம், மா. சீனிவாசன்,ச. வெங்கடசாமி, அணிகளின் அமைப்பாளர்கள் சிட்லபாக்கம் இ.மனோகரன் விஜயகுமார்க,தசரதன், கபிலன், தாம்பரம் மாநகர மாமன்ற உறுப்பினர்கள் இரா.ராஜா. எம்.சி,எஸ்.கற்பகம் சுரேஷ்.எம் சி, சி.ஜெகன், பரிமளா சிட்டிபாபு, அமைப்பாளர் ஜே.மணி, ஆனந்த கிருஷ்ணன்,எம். எஸ். குமார், நாவா சுரேஷ்,வட்ட கழகசெயலாளர்,சி.மணிவேல்,ஆர்.சதீஷ்குமார்,எல் தனவந்தன், சிட்லபாக்கம் விஜயபாரதி.இளைஞரணி துணை அமைப்பாளர்கள், எம் நரேஷ், எஸ்.ஸ்ரீராம்.எம்.கே.பாரதிராஜா,என்.விஜயகுமார், கே.பி.பி.லட்சுமணன், பா.சதீஷ் வர்த்தக அணி, நாராயணசாமி (எ)ரஜினி,பாலமுருகன், சிட்லபாக்கம் பிரதாப், தாம்பரம் மாநகர நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர் வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இரா சுரேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது.